**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

**Calendar Case No.225 of 2023**
**Prosecution Witness**:PW2

| | | | |
|---|---|---|---|
| Name | பொன்னுசாமி (PW2) | | |
| Father's Name | ராமசாமி | | |
| Village | அணைக்காடு | | |
| Taluk | திருப்பூர் | | |
| District | திருப்பூர் மாவட்டம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **05th day of March 2026** by K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused present),*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

நான் மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். கடந்த 12.03.2023 தேதியன்று திருப்பூர் டு அவிநாசி டி மார்ட் தாண்டி பாலம் நுழையும் இடத்தில் ஒரு பையன் தன்னுடைய பல்சர் வாகனத்தில் அவிநாசி நோக்கி சென்று கொண்டிருந்தார். நான் திருப்பூரில் இருந்து அன்னூர் செல்வதற்காக அதே ரோட்டில் வாகனத்திற்கு பின்புறம் சென்று கொண்டிருந்தேன். அப்போது அரசு பேருந்து நான்காம் நம்பர் கொண்ட பேருந்து அந்த வாகனத்தின் எண் 0091. அந்தப் பேருந்து பல்சரை ஓவர் டெக் எடுக்கும் போது பேருந்தின் இடதுபுறம் வாகனத்தில் மோதி அவருக்கு கீழே விழுந்து தலையில் அடிபட்டது. உடனடியாக ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொன்னேன் அவர் அந்த நபரின் போனை எடுத்து அவரது தகப்பனாருக்கு போன் மூலம் தகவல் சொன்னேன்.அந்த வாகனத்தின் ஓட்டுனரை பார்த்தேன் அவர் இறங்கி ஓடினார். அப்போது மணி சுமார் இரவு 8.15 இருக்கும்.போலீசார் என்னை விசாரித்தனர். அந்த நபரை அவிநாசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தார்கள் அங்கு அவர் காலமாகி விட்டதாக தெரிந்து கொண்டேன்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

திருப்பூர் அவிநாசி ரோடு நான்கு வழி சாலை என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்தில் செல்வதற்கு ஒரு பாலமும் வருவதற்கு ஒரு பாலமும் உள்ளது என்றால் சரிதான். அரசு பேருந்து என்னை ஓவர் டேக் செய்து முன்னர் சென்றது. டி மார்ட்டிற்கு எதிரில்

அம்மாபாளையம் பஸ் ஸ்டாப் உள்ளது என்றால் சரிதான். மேற்படி பேருந்து நிறுத்தத்தில் டவுன் பஸ் நிறுத்தம் உள்ளது என்றால் சரிதான். டி மார்ட்டிற்கும் சம்பவம் நடந்த இடத்திற்கும் சுமார் 350 அடி தூரம் இருக்கும் என்றால் சரிதான். அந்தப் பாலத்தின் இரு புறத்திலும் விளக்குகள் ஏதுமில்லை என்றால் சரிதான்.பஸ் என்னை ஓவர் டேக் செய்து சென்ற பின்னர் அந்த வாகனத்தை அடித்து சத்தம் கேட்டு தான் நான் பார்த்தேன் என்றால் சரிதான். பாலத்தின் ஐந்து முதல் பத்து அடிக்குள் விபத்து ஏற்பட்டது என்று நான் சொல்கிறேன் என்றால் சரிதான். பேருந்துக்குள் எத்தனை நபர்கள் இருந்திருப்பார்கள் என்றால் எனக்கு தெரியாது. பேருந்தில் இருந்து 10,20 நபர்கள் இறங்கிக் கொண்டிருந்தார்கள். நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது 10 பேர் இருந்தார்கள் 10 நபர்கள் சென்று விட்டார்கள். விபத்து நான் சொன்ன இடத்தில் நடைபெறவில்லை என்றும் அந்த பாலத்தின் மையப் பகுதி தாண்டி தான் விபத்து நடைபெற்று உள்ளது என்றால் சரியல்ல. விபத்து நடந்த சமயத்தில் நான் அந்த இடத்தில் இல்லாததால் தான் என்னால் எந்த இடத்தில் விபத்து நடந்தது என்று குறிப்பிட்டு சொல்ல இயலவில்லை என்றால் சரியல்ல. இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்தவர் சைடு ஸ்டேண்டை எடுத்து விடாமல் சென்றதால் அந்த சைடு ஸ்டாண்ட் பேருந்தின் லெப்ட் பகுதியில் பட்டு அவர் பேருந்தின் பின் சக்கரத்தில் சிக்கிக்கொண்டார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

**மறுவிசாரணை:– இல்லை**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |